
"மாறன்" தமிழ்நூற் பதிப்புக் கழகத்தின் வெளியீடு நெ-6.

உ

கடவுள் துணை.

பலவித்துவான்க ளியற்றிய

சீட்டுக்கவித் திரட்டு



இவை

தமிழ்ப் பண்டிதர்

பு. அ. கோவிந்தராஜ நாயகர் அவர்களால்

பார்வை யிடப்பெற்று,

சென்னைப் - புரசை,

பு. அ. வேங்கடேச நாயகர் அவர்களது

"மாறன்" அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை]   1927.   [அணா 3

முகவுரை.

பல வித்துவான்கள் பாடிய இச் சீட்டுக்கவித் திரட்டை முன்பு திருத்தணிகை சரவணப் பெருமாளையரவர்களால் வெகு சுத்தமாக அச்சிட்டு வெளிவந்திருந்தும் இடையில் பல பிழைகளுடனும் ஒன்றுக்கொன்றொவ்வாமலுமாக இருந்ததை ஒருவாறு பிழைகளைத் திருத்தியும், பதங்களைப் பிரித்தும், எந்தெந்த பிரபுக்களின் பேரில் பாடினார்களோ அப்பிரபுக்களின் நாமதேயங்களையும் அப்பாட்டுக்களின் தலைப்பில் அமைக்கப்பட்டிருப்பதாலும், இது தமிழ் பயிலும் மாணவர்களுக்கு மிகவும் உபயோகமாயிருக்குமென்று நம்புகிறேன்.

இப் புத்தகத்தை இவ்வண்ணம் திருத்தி அச்சிட்டு ரெஜிஸ்தர் செய்திருப்பதால் இவ்வாறு அச்சிடக்கூடாதென்றும் இதனால் தெரிவிக்கிறேன். அப்படி மீறி அச்சிடுவரேல் கனம் பொருந்திய கவர்ன்மெண்டு சட்டப்படி சகல நஷ்டத்திற்கு முள்ளாவார்களென்று அறிவிக்கிறேன்.

இப்புத்தகத்திற் காணும் வழுக்களை தெரிந்தவர்கள் எனக்குத் தெரிவித்தால் அவற்றை மறு பதிப்பில் திருத்தி அச்சிடுவதோடு என் அன்பார்ந்த வந்தனத்தையும் அவர்களுக்குச் செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

புரசைப்பாக்கம். இங்ஙனம்:

பு. அ. வேங்கடேச நாயகர்.

புத்தக விளம்பரம்.

வண்ணத் திரட்டு

இதில் பல வித்துவான்களால் இயற்றப்பட்ட வண்ணங்களும், தண்டபாணி சுவாமிகள் என்னும் (புலவர் புராணம்பாடிய) முருகதாசர் இயற்றிய வண்ணமும், சென்னைப் பச்சையப்பன உயர்தரப் பாடசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதா கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் இயற்றிய வண்ணமும், வசன நடையில எழுதிய வண்ணப்பாவின இலக்கணமும் சேர்க்கப்பட்டிருப்பதோடு வண்ணப் பாவின இலக்கணத்தைக் கூறும் பண்டைய சூத்திரமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா—8

திவ்வியகவி பிள்ளைப் பெருமாளையங்கார்

அருளிச்செய்த

அஷ்டப்பிரபந்தம்

இதற்குச் சென்னைப் பச்சையப்பன் உயர்தரப் பாடசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் மாணவர் பு. அ. கோவிந்தராஜ நாயகர் இயற்றிய நூல்விஷயமும், அரும்பத உரையும், இந்நூலாசிரியர் இயற்றிய திருநறையூர்நம்பி மேக விடுதூதும் திருத்தலமகிமையும், திருத்தலங்களுக்கு திருநாமம் வந்த காரணமும், புதிதாக எழுதப்பட்டிருக்கின்றன. விலை ரூ—1

வருணகுலாதித்தன் மடல்

காசைச் [illegible] என்னும் பெயருடைய வருணகுலாதித்தன் மடலுக்குப் பண்டைய தமிழ் நூல்களாகிய 'கலித்தொகை', 'வளையாபதி', 'சிந்தாமணி', 'தஞ்சைவாணன்கோவை', முதலிய பல நூல்களில் இருந்து மேற்கோள்கள் பல காட்டப்பட்டிருப்பதாலும் மடலேறு துறையின் இலக்கணமும், சேர்க்கப்பட்டிருப்பதாலும், [illegible] மிகவும் உபயோகமான அகப்பொருள் நூலை [illegible] ஒவ்வும் தொன்றாம். விலை அணா—8

“மாறன்” அச்சுக்கூடம், புரசை, சென்னை.

உ

கணபதி துணை.

சீட்டுக்கவித் திரட்டு.

அஷ்டாவதானி,

சரவணப்பெருமாள் கவிராயர்

பாடியவை.

இலட்சுமணமந்திரிமீது பாடியது.

மரபுரவி ராகவன் சோமசுந்தரகுரு
மலர்ப்பதம் பரவு நேசன்
வளர்தமிழ்ச் சரவணப் பெருமாள் கவிராசசக்
கரவர்த்திதீர்ந் தெழுதுகிருபம்
வளர்காரை யம்பதியின் மேவுதுரை லக்ஷுமண
மந்த்ரியெதிர் கொடுசார்ந்த பா
வாரைக் குபகாரி நீயாகை யாலெமது
வெல்லைமையு மகிமையுங் கேள்
கருணீகர் நால்வர்க்கு நாற்கவிதை சொல்லவாப்
பனவேறு மாயிலு மென்னக
காவிலொரு கவிதையுமர் மேகாவிலெ நதரிகைகாமந
கையிலொரு கவிதை யெழுதக
கணக்கொருபுறஞ்சொல விலக்கொருபுறஞ்சொலக்
நாணுத திரைமணையிலெ
சதுரங்கமொரு குதிரைபதிசொலக்
கன்னெல்லு முதலி லெண்ணப்
பரிவுபெற் றப்புதுச் சேரியிற் சென்றினிய
பண்பரிற் சினைய வாத்தி
பண்பார குமாரபாரதிமன்ராசகவிவீர
பத்ரகவி கொண்டாடவே

பாகசியனு னந்தநா தன்சபையி லுஞ்செய்து
பல்லக்கு வரிசை பெற்றேன்
பலகாவி யங்களுந் தெரிவே னளப்பரிய
பஞ்ச லக்ஷணமு மறிவேன்
அரசரி லுயர்ந்ததுரை யாரெனிற் சேதுபதி
யாகுமவன் மணிவா யிலில்
அகத்திய முனிக்குமதி நங்கற்ற பேர்களா
யாயிரங் கவிவாண ருண்
டவரிலொரு சிறுவன்யான் பாடவரி யரெனன்
றகற்றிவிட் டார்க ளென்னை
ஆதலாற் பூமியிற் சஞ்சரித் தேனின்
னகந்தனின் மகிழ்ந்தருள் வையமே. 1

முத்துக்கருப்பண்ண விலக்ஷணன்மீது பாடியது.

கல்விச் சமுத்திரங் கமலால யந்தமிழ்க்
கடன்மடை திறந்த வெள்ளம்
கற்பனை பிறப்பிடங் கலைமக ளிருப்பிடங்
கவிமாரி பொழியு மேகம்
சொல்விற் பனம்விளையு மதுரக் களஞ்சியந்
தோன்றுகர்ப் பூர தீபம்
சுகிர்தகுண வவதானி சரவணப் பெருமாள்கை
தொட்டெழுதி விட்ட சனது
வில்லுக் கருச்சுனன் சொல்லுக் கரிச்சந்த்ரன்
வெற்றிக்கு விக்ர மார்க்கன்
வித்தைக் ககத்தியன் முத்துக் கருப்பண்ண
விலக்ஷண னெதிர்ந்து காண்க
மல்வெற்றி யாயென்று தாயென்று நீயென்று
மாலென்று வேலென் றுகா
மாவென்று காவென்று நாவொன்று பாவொன்று
வருகின்ற தருள் புரிகவே. 2

திருமலைராயன் பட்டினத்தவர்மீது பாடியது.

எவ்வன மன்னன்மணி பதப்பணிகொள் சேதுபதி
யிறைவன்மணி வாசன் மணிவாய்
இலகுமணி சைவமணி சோமசுந் தரகுருவெ
னையன்மகிழ் சிந்தா மணி
செவ்வசன மொழிதமிழ்ச் சரவணப் பெருமாள்
சிரோமணி யனுப்பு மோலை
செய்யதிரு மலைராயன் பட்டினத் தவரெலாஞ்
சிரசுமேற் கொண்டு காண்க
இவ்வூரில் வந்துதிரு மலைராய னைப்போற்றி
யிலகுகவி காள மேகம்
எமகண்ட மொருதினுசு பாடினு னுமயிங்
கிரெட்டு வகை பாடுவோம்
ஒவ்விதை யறிந்துகன தனவரிசை யுதவினு
னுமதுகுடி வாழி வாழி
உதவா திருப்பிரெனி னுமதுபட் டினமின்ன
மொருமிக்க மண் மாரியே. 3

மகமதுதம்பிசாகிபுமீது பாடியது.

அவ்வொன்று மவதானி தமிழொன்று வெகுமானி
யறிவொன்று சேதுபதி பால்
அணியொன்று வெகுமானி சோமசுந் தரகுருவி
னருளொன்று மடிமை வெள்ளைக்
கவ்வொன்று மலைநாவ னதியொன்று கோத்திரன்
கனியொன்று குவளை மார்பன்
கதியொன்று சரவணப் பெருமாள் கவீசுரன்
கையொன்று மெழுது மோலை
தெவ்வென்று சமர்வென்ற திகழ்மகம் மதுதம்பி
தீரனெதிர் கொண்டு காண்க

செழுஞ்சென்ன பட்டின மதிற்கேகு வோம்வழிச்
செலவுக்கு வேண்டு மதனால்
உவ்வொன்று பவ்வொன்று லவ்வொன்று டவ்வொன்று
சவ்வொன்று மவ்வொன்று வவ்
வொன்றுரவ் வொன்றுரவ் வொன்றுகவ் வொன்றுனவ்
வொன்றுவர விடல் வேண்டுமே. 4

சிங்கபூபன்மீது பாடியது.

பைங்குவளை மார்பனெடு வையைவள னாடனுயர்
பார்த்திவர்கள் புகழ்ந ஊரன்
பாக்யநதி குலதிலகன் போகபுரன் மேழிப்
பதாகையான் பூமி பாலன்
மங்கலக் கவிராசன் வித்வஜன சேகரன்
மணித்தமிழ்ச் சம்ப்ர தாயன்
வஜ்ரமேக னப்பத்ம நாபன்வே லாயுத
மகாமந்த்ரி குரு புத்திரன்
துங்கமிகு சேதுபதி மகிழுநேச சன்சோம
சுந்தர சுவாமி தாசன்
சோடச வைதான சரவணப் பெருமாள்
சுயம்ப்ரகா சன்னை போலே
பொங்கிவளர் செல்வச் செழுஞ்சென்ன பட்டினப்
பொன்னகர்த் தெருவி சிங்க
பூபனெதிர் வந்தகன் றென்சவைமி லவதான
புனிதமறி வும் வேண்டுமே. 5

விருதரசுபட்டபொம்மேந்த்ரதுரைமீது பாடியது

நாவலவ ருக்குளொரு நிகராய கம்புவியில்
ராஜரா ஜர்க்கு மகுடம்
நதிகுலவ ரோதயஞ் சகலகலை ஞானகமே
நாகுநப்விக் யாடம் பரம்

பூவில்விலை மதியாத மாணிக்க மவதான
புனிதமாற் றேங்கு தங்கம்
புகழுமனு விஜ்ஞான நாற்கவி யிலாசமெய்ப்
புத்தமு தடைத்த கும்பம
மாவள மிருங்கொளுச் சேதுபதி வாசலில்
வயங்குகர்ப் பூர தீபம்
வளர்தமிழ்ச் சோமசுந் தரகுரு பரநாதின்மா
மலரருச் சனைசெயன்பன்
மேவுபுகழ் சரவணப் பெருமாள் கோபாலஜய
வீரபாண் டியவுதார
விருதரசு பட்டபோம் மேந்த்ரதுரை யெதிர்கொண்டு
வெகுவரிசை வரவிடுகவே. 6

குணராம செந்தொட்டிமீது பாடியது.

வார்பெறுங் கலசமுலை யார்மருகன் சேதுபதி
வாசற்ப்ர சண்ட வாக்கி
வடிதமிழ்க் கும்பன் சுவாமிநாதன் மணவன்
வளர்நெல்லை யப்பன் மைந்தன்
பார்பெறுங் குணஞான சோமசுந் தரகுரு
பதாம்புயம் பரவு தாசன்
பைந்தமி ழிலக்கண விலக்கியச் சடாண்டு
பாரெலாம் பொழியு மேகம்
கார்பெறுங் கையனுயர் சரவணப் பெருமாள்
கனிர்தெழுது கின்ற வோலை
கதிகொளை கிரியில்வா குணராம செந்தோட்டி
காளையெதிர் கொண்டு காண்க
சீர்பெறுமி றைணன்றசக்ஷ ரங்கொடு பொன்பெறச்
செய்துனைத் தேடி வந்தோம்
திண்புய மதிற்புனைந் தென்றனை பனுப்பிடிற்
செகமெலாங் கொண் டாடுமே. 7

முருபாதர் மகாராஜா அவர்கள் மீது

பனகசய னத்தன்ப்ர சித்தன்மகி மைச்சேது
பதிமகிழ் தமிழ்ப்ர சங்கன்
பைந்தமி ழகத்தியன் சோமசுந் தரகுரு
பதாம்புயம் பரவு முமவோன்
பாரகா வியமதொடு லக்ஷாதி லக்ஷப்ர
பந்தமொரு நாழிகையி லே
பாடியெவ ருக்குமரி தானவவ தானம்
பகுக்குமுயர் சம்ப்ர தாயன்
தனகனக வாஹன விஜேதசர் வஜ்ஞான
சாம்ப்ராச்ய சார்வ பூமன்
சத்புத்ர சன்மார்க்க சத்ப்ரபல சத்சுகிர்த
சத்சிநே கப்ர தாபன்
சகலகுண சம்பன சிரோரத்ந முக்யபுனி
தப்ரதா னச்சி ரேஷ்டன்
சரவணப் பெருமாள் கவிச்சரப மெனுஞான
ஜநகனெழு துங்கா கிதம்
குனிவில்மக தத்தர்வட கத்தர்நிட தத்தர்குட
கத்தர்முனை மக்கர் மச்சர்
கொச்சிய குலத்தர்குரு வத்தர்துரு வத்தர்குரு
தத்தர்மிது லக்கு ளரசர்
கொங்கணர் கவுந்தியர் தெலுங்கரொடு டங்கணர்
குலிங்கரடல் சிந்து மகிபர்
கொங்கர்சில வங்கர்பல கங்கர்செறி யங்கரணி
கொண்டுநிலை நின்று பணியக்
கனதைபெறும் அசாது நபாபு பாலாசா
கருணையா யுதவு மினிய
கனியுமுழு தத்துவு முருபாதர் மஹாராஜ
காவல னெதிர்ந்து காண்க

கடலெலாஞ் சூழ்ந்திடு புவிச்சக்ர வர்த்திநீ
கவிச்சக்ர வர்த்தி யாமே
கண்டாய்சொ லைதான முறையார்க்கி னும்புகழ்
கதிக்குமுல குளமட்டு மே. 8

முத்தளகுசாமிபூபதிமீது பாடியது.

வண்ணப்ர பந்தத்து முந்தமிழ்ப் பாமும்
மதத்தைக் கரந் தொழுக்கி
வறப்பினும் வளர்ந்தரு பொருப்பொப் பெனச்சித்ர
வாய்விட் டதட்டி வேட்டு
மதுரகவ ளத்தைத் திரட்டிந் திரட்டிச்செவ்
வாய்மடுத் தூண்டு கோட்டு
வப்பெழுத் தாணிகொண் டேற்றெழு கல்விக்கடல்
வயங்கு ப்ரளயத்தின் மூழ்கி
அண்ணவரு வெவ்விளைக் கெர்ப்பத்தை யெற்றிநா
லடிகொண்ட பண்ண டத்தி
அழகிய நனூ பணிக் கச்சமிட் டெக்களித்
தாக்ரமித் துக்ர முற்றி
அஷ்டாவ தானமெனு முன்மத்த மேறியறி
யாமைநிக ளமுத றித்தே
ஆருந்து திக்கைபெற் றக்கட் கடைப்பொறி
யனற்பிறக் கச்சி னத்தே
பண்ணர செனத்திறை கொடாமன வுலுத்தப்
பசாசரை வளைந்து கொண்டே
பழமொழி யிரும்புலக் கைப்படையி னூற்சிதறு
பஞ்சுபஞ் சாவ டித்துப்
பரகுரு வெனும்பாக னடிமலர் சுமந்தவன்
பணிமலர்த் தோட்டி நனியாற்
பரிவுடன் வணங்கிநெஞ் சரவணப் பெருமாள்
பருஉக்களி றனுப்பு மோலை

தண்ணமிர்த வாரியுயர் செல்லையம் பதியரசு
சங்கநிதி சேது பதிவா
சன்மார்க்கன் மகன்மகன் றலைமுறைக ளாகப்ர
தானியாம் பூகி மந்த்ரி
தந்த்ரமுத் தளநமாரு மகனுனை முத்தளகு
சாமியெதிர் கொண்டு காண்க
சார்வான தூதொன்று பாடிவந் தனமுனது
தயவுகூர்ந் தருள் புரிவையே. 9

இரவணப்பபூபதிமீது பாடியது.

தொடையெலாந் திரிபுசொற் பொருளெலாங் கற்பனையெ
துகையெலா மாலை மாற்று
சொல்லெலா மதுரம்வெண் பாவெலாங் கதைகவித்
துறையெலா மேக பாதம்
தூதெலாஞ் சங்கமஞ் சரியெலாங் கௌடமா
சுகமெலாந் தனிநி ரோஷ்டம்
சுயமெலா நிமிஷமெப் கணமெலாங் கணம்வணத்
துறையெலா நாக பந்தம்
அடையெலாஞ் சிவசரிதை சிந்தெலா நீதிகொச்
சகமெலா மடி மடக்கவ்
வடியெலா மெமகமுபார் பதமெலாங் கட்டுநா
டகமெலா நவசித் திரம்
அசையெலா மிருதொம நல்சொ ஞாலெலாம் வேதம
ந்த்ரமெலாம் பிரம லகிதம்
அளவெலாந் தாரதந்திரம் முடிவெலாம் பொருளா
வமைத்திலாம் பாடு கவிஞன்
பெடையெலாஞ் சேரனப் புடையெலாஞ் செறிவயற்
பெருநெலார் தேவை முல்லைப்
பிணையெலாஞ் சேதுபதி புகழெலாம் போற்றிவரு
பெட்பெலாந் திகழ்சி லாக்யன்

பெறுகலான் சோமசுந் தரகுரு பதத்தைப்
　　பிறவெலாம் போற்று படிமை
மேச்செலா முததமொழி யாசசொலுஞ சரவணப்
　　பெருமாள் விருங் காகிதம
படையெலாங் கொணடுபொரு பகைபெலாம் வென்றுநற்
　　பண்பெலா மறியு நிபுணன்
பாரெலாம் போற்றவரு ரகுணப்ப பூபனெதிர்
　　பண்பெலாங் கொணடு சான்க
பலனெலாம் பலனெலா நலனெலாங் கலமெலாம்
　　பரிபெலாம் கரியெலாம் பொற்
பணியெலா மணியெலாந் துகிலெலா நெல்லெலாம
　　பணியிலெடாம் நரல் [illegible]. 10

சிவகங்கை பட்டினத்தார்மீது பாடியது.

தண்ணமுத சாகரங் கவிராசர் தங்கந்
　　தமிழ்க்கடலை யுண்ட பேரர்
[illegible] குணா [illegible]
　　[illegible]
வண்ணப்ர பந்தமு முப்பரத் [illegible]
　　மணை [illegible] வ தானம
வாசாம கோசரவ் [illegible] வாசங்கிநப்
　　வர்செயல் [illegible]
கன்னிலவு [illegible]
　　[illegible] போரம்
கதுவர்கள் கொடிடாத சரவணப் பெருமாள்
　　[illegible]
பன்னுலவு சிவகங்கை யம்பதிப் [illegible]
　　பலரெதிர் நடந்து காண்க
பரிவுறு புராதன மிலுரென்று வந்தனம
　　[illegible] கிரிகவே. 11

ஆதிகேரள மகாராஜன்மீது பாடியது.

நாதுபதி நாருபதி யாதுபதி சேதுபதி
வாசற் கவிப்ர சங்கன்
மங்களா கரபுஞ்ச நாற்கவிக ணிறைகும்ப
மதுரப்ர பந்த மேகம்
வடிதமிழ்க் குஞ்சரங் கவிராச சிங்கமது
ராகமவ தான சரபம்
வண்ணக் களஞ்சியஞ் சிந்துச் சமுத்திர
மணக்குந் தமிழ்ப் பொக்கிஷம்
சோதிப்ர காசஞ் சிலாக்யசற் பாத்திரஞ்
சுகிர்தசற் சைவ துல்யம்
சுகாதிக சுஜாதிக சுதாகர சுயாகம
சுபாகசந் புருஷ ரத்னம்
சுதந்தர சுமங்கல சுரஞ்சித சுமந்திர
சுபம்ப்ரகா சப்ர தாபம்
சுபத்திர சுலக்ஷண சுகற்புத சுசற்சன
சுகப்ரபல ரத்நா கரம்
காதல்செய் சிவஜ்ஞான விற்பன தடாகஞ்ச
கலகலைஜ் ஞான பீடம்
கல்விப்ர வாகம்வித் யாடம்ப ரந்தமிழ்க்
கடன்மடை திறந்த வெள்ளம்
கனசபா பூஷணஞ் சோமசுந் தரகுரு
கடாக்ஷவீ க்ஷணவி லாசன்
கங்கைகுல திலகஞஞ் சரவணப் பெருமாள்
கவிச்சக்ர வர்த்தி யோலை
ஆதிகே ரளராம வண்மைமக ராஜனே
முடியெதிர் நடந்து காண்க
அசரது நபாபுசரி பேட்டிபெற் றேமியா
மறியாத தேச மில்லை

அரியதென் றிசைவந்த தேரிதனிற் பொதிகையி
லகத்திய னிருக்கி றானும்
அவனையுங் கண்டுனது மகிமையுங் கண்டுநா
மறியலா மெனவந் ததே. 12

முத்திருளப்ப சேதுபதிமீது பாடியது.

மாறுமல் வாய்வேலு மயிலுமென வேசொல்ல
வாசகங் கைக ளெழுத
வருகணக் கொருபுறந் தீரமற் றொருபுறம்
வரைந்திடு மிலக்க மாற
வளைதிரைக் குட்சிறிது கல்லணி வகுக்கின்ற
வன்கணக் கினிது பகர
மருவுசொக் கட்டானும் விளையாட மறைவாக
வைத்தசது ரங்க மாடக்
கூறுக வெட்டெழுத் தாணியெழு தும்படிக்
குங்கவிதை பகர விதிலோர்
கூரெழுத் தாணிசது ரங்கமுது குப்புறங்
குதிரையடி வெண்பா வரக்
கூறுபுல வோர்சபையி லஷ்டாவ தானமுல
கோர்புகழ வே நடத்தக்
கோடிலாச் சதுரங்க மாடவய லூரிருக்
குஞ்சூது மாட வொருபோர்
ஏறுகி வண்ணப்ர பந்தமெட் டுப்பேர்க்
கெழுத்தெழுத் தாவு ரைக்க
இவ்வாறு நற்புறக் கவிதாப்ர சங்கம
திசைக்கும்ப்ர சண்ட வாக்கி
இலக்கண விலக்கியக் கடலைமுழு துங்குடித்
தேப்பமிடு காள மேகம்
இனியகவி யவதானி சரவணப் பெருமாள்கை
யெழுதுமொப் பத்தி ஞேலை

சேரூடு குங்குமக் கொங்கையார் மடலெழுது
திவ்யரவணிக மோகன்
சேதுபதி வாசற்பர தானிமுத் திருளப்ப
சிங்கமே பெதிர்ந்து காவாக
சித்தபரி பூரண கடாக்ஷவீ க்ஷணகுண
தியாகபரணீயாகை யாற்
செந்தமிழ்க் காமுற்பர பந்தமொன் றுன்மீது
செய்துவந் தனம கிழ்ந்தே. 13

இராமனுதேந்திர சர்ப்பன்னன்மீது பாடியது.

நானூறு வண்ணமுற் றைந்நூறு மநுசரி
நடத்துமறு நூறு நூறு
நாலாயி ரமபரணி பையாயி ரங்கோவை
நாடகம் பதினாயிரம்
நாற்பத்து நாலாயி ரத்துநா னூறுபத
நாலுலக்ஷ [illegible] ம
நாற்பத்தி ரண்டுலக்ஷம் பரிசைக ளொரு
நாழிகை தனிற் பாடுவான்
தேனூறு மதுரச் செழுந்தமிழ்க் கெல்லையாய்ச்
சித்தாந்த வேதாந் தராஜ
சிதவசிஷ்ட சிரேஷ்டராச லாகார புராதன
சிலாம்பரசா சன்னி யாதிகன்
நிடசித்த சற்குண சற்சன வரபாரா
திபசமபர நாய துல்பன
செய்பகல கண்டரூப தனாதிப தண்டவித்
திரபடம் பரிபர சண்டன்
வாணூர பெருமபுரமு தலமிலை நகலபிர
லங்களில் பைங்கு முசிதன
மைக்கட் கடற்பொற் புவிக்குட் பரசித்தக்
தவககொற் றவர்க் குரியவன்

மகராச ராசருந் திறைமுந் தேர்துரைதி
வாசற கவிபர சபகன
வண்டமிழ் புலைககரை ச சோமசுந் தரகுரு
சுவாமி பாடி மைகரு மரபை
பானுா ரு மெனமொழிர சரவணப் பெருமாள்பர
பகைவிஞ னெழுது மோலை
பாவைதென் றேவை ரா மீசனருள் பெறுபரா
பரராம நாத முனிவன்
பாதமற வாதவன ராமனு தேந்த்ரசர்ப்
பன்னனெ திரா கொண்டு காண்க
பணிமதிச் சடி லன்மே வினிபபாை விடுதாது
பாடிவந் தனம கிழ்ந்தே. 14

சொக்கலிங்கபூபதிமீது பாடியது.

அட்டதிசை பணிசெயுந சேதுபதி மகிவாச
லஷ்டாவ தான சிங்கம
அருந்தமிழ்ச் சோமசுந் தரகுரு சுவாமியடி
மைகதுமடி மைகரு மரபை
அசாது சபாபுவை வாசசொலிக காகிதமே
ராலவர மறு பிறைவத்தான
ஆயிரத் தெட்டடி வரச்சொலி ரசாதுவள
வாய்முதலி யாரகரு விட்டோனை
எட்டடி வரசசொலித் தருதைபா சறிகிலத
துளளுசீட் டுகைகொடுத் தோனை
எழுபடி வரசசொலமி மலைராச னுகமோலை
யெழுதிவுத தரவு செய்தோனை
இனியபா ஊபகார ருககெலா மொபபமிட்
டெழுதுகிரு பங்கொ டுத்தோன்
இக்கரையு மல்லாம லக்கரையில் யாழ்ப்பாண
மெல்லாங் கிளாக்கு விட்டோன்

கொட்டமிடு லோபரைப் புத்திவர வன்கவிக்
கொறடாவி லடிப் போன்
கூறியகவிக ளர்த்த மறியார்க டலையிலே
குட்டிப் பாடஞ் சொல்லுவோன்
குற்றஞ்சொல் வோர்களைச் சோழன்மக னைப்போல
முத்திச் சிகை தவிர்ப்போன்
கோளாகலை வசைவுக் கவிதைக யிற்றாடு
கோத்துத் தா ரணங்கட்டு வோன்
கட்டியா ணிக்கமுமார் சரவணப் பெருமாள்
கவிச் சக்ர வர்த்தி போலே
கனமாமலை நகர்மேவு சோக்கலிங்கக் கொடைக்
கர்ணனெதிர் கொண்டு காண்க
கணபதி தருந்திரு முகத்தைமுன் சொன்னபடி
கண்டரங் கேற்றி யன்பாய்க்
கனகமும் பவளமுந் தரளமுங் கோமே
தகங்களுந் தந்தருள் வையே. 15

விசயரகுநாததொண்டைமான்மீது பாடியது.

நீதிபெறு கல்விப்ர தானந் தெளிந்திடு
நிதானஞா னப்ர காசம்
நித்திய சுமங்களக் கவிதாப்ர சங்கமன்
னேயசுந் தரவி லாசம்
வேதாந்த சாகரஞ் சித்ராவ தானதமிழ்
மேகஞ் சபா ரஞ்சிதம்
வித்வசன சேகரஞ் சேதுபதி வாசலில்
விளங்குநவ ரத்ந தீபம்
சீதரன் சோமசுந் தரகுரு சுவாமியிரு
திருவடி துதிக்கு மடிமை
சீர்பெறுஞ் சரவணப் பெருமாள் கவீசுவரச்
செயசிங்க மெழுது மோலை

மாதவன் விசயரகு நாதத்துரைத் தோண்ட
மானெதிர் நடந்து காண்க
வரிசைபெறா நாமொன்று பாடிவந்தன முனது
மனமகிழ்ந் தருள் புரிவையே. 16

சிங்கநகர் குமாரவேற்பூபன்மீது பாடியது.

மகபதி நராதிபதி நீதிபதி சேதுபதி
வாசற்ப்ர சண்ட வாக்கி
வடிதமிழ்ச் சோமசுந் தரகுரு சுவாமியடி
மைக்குமடி மைக்கு மடிமை
மயில்வா கனக்கடவு ளருளினு மயசா
மாவிருது கொண்ட நல்லன்
மலையாள ராசனருள் தந்தபல் லக்குமெது
மதிபெற்ற சார்வ பூபன்
யுகமெலா மகிமைபெறு தஞ்சைமக ராசனையோ
ரேழடி யழைத்த நிபுணன்
உசிதனச ரதுபா பிருகையாற் றருவரிசை
யொருகையால் வாங்கு கவிஞன்
உற்றசிவ கங்கையிற் கவுரிவல் லவராச
னுதவுவள நாடுபெற் றோன்
உயரிலங் கைப்பூமி ராசசமு கத்தினிலு
மொருகோடி வரிசை கொண்டோன்
ககனமூ தண்டமே தண்டபிர மாண்டமுங்
கவிபுகழ் படைத்த வுரவோன்
காசிமுத லாகரா மேசுர வரைக்குங்
கவித்துவச நாட்டு விஜயன்
கற்றுச் சொலிக்கும்வரு ஸ்தானு பதிக்குமிரு
கனகதண் டிகைகொடுத் தோன்
கவிமதக் குஞ்சரஞ் சரவணப் பெருமாள்
கவிச்சக்ர வர்த்தி போலே

புகழ்மேவு சிங்கநகர் வளரும் குமாரவேற்
பூபனெதிர் கொண்டு காணக
பொரவரா வேங்கையை பாராத நாதுசெம்
புக்குளமை யாத சாமி
புவியிலிரு ளாவேம மேய்ந்துவள ராமாடு
பொங்கிவே காத காணம்
பூண்டொடி படாவத்த மறுபடா வுடலேழு
பொதிர்ந்து நீவாழி யே. 17

யாழ்ப்பாணம்
வயித்தியலிங்கேந்திரன்மீது பாடியது.

செயராம நாதனே தெய்வந் தனுக்கோடி
தீர்த்தமே தீர்த்த மெங்கள்
சேதுபதி யேராஜ னெனவணங் கார்களைச்
சீறிவா யைக்கி ழித்துச்
செள்ளையை நறுக்கிவளர் பல்லையு முடைத்துச்
செழுங்குட ரையும் பிடுங்கிச
சிரசையு மறுத்துக்ர முகவிருது பெறுவிஜய
சிங்கடா கைப்ர சண்டன்
நயமதுர மறியாத முழுமடையர் செவியென்னு
நல்ல பாம்புப் புற்றிலே
நளினத் திருந்தமிழ்ச் செந்தேன் குழம்பையொரு
நாளுங் கவிழ்த்திடா தோன்
நாவலந் தீவிலுள நாடெலாம் புகழ்பெறு
நராதிபர் வணங்கு துல்யன்
நாவலா குழாம்பல துதிக்குமஷ் டாவதா
னப்ரபல சார்வ பூபன்
இயலா யிரங்கோடி பிரபந்த முழுதுமொ
ரிமைப்பொழு தினிற்பாடு வோன்
இலக்கண சமுத்திரஞ் சோமநங் தரகுரு
வெனட் டைக்கு மடிமை

ஏகசக் ராதிபதி சரவணப் பெருமாள்
கவீசுவரன் செங்கை போலே
இந்த்ரதரு யாழ்ப்பாண மேவிப வயித்தியலிங்
கேந்த்ரனெதிர் கொண்டு காண்க
வயமான கையிலே மூக்குள்ள தொன்றுதிரு
மாயன் பிறப்பி லொன்று
வாற்புறமோர் கொம்புந் தலைப்புறமோர் கொம்புமுள
வாகனந் தன்னி லொன்று
வலியார் புரங்களைச் சுடுகின்ற பொருளொன்று
வாரமது தன்னி லொன்று
வரவுடன் வெளுத்தசந் திரனென்று நீயின்று
வரிசைதந் தருள் புரிவையே. 18

சுங்கப்பிராமணர்கள்மீது பாடியது.

அவதானி சரவணப் பெருமாள் கவீசுர
னச்சென்ன பட்டின முதல்
ஆப்ராம நாதபுரம் வரையுமுள சுங்கப்
பிராமணர்க் கெலாம் விணப்பம்
நவமுள துருக்கர்க் கெலாஞ்சலா முதலிமார்
நாய்க்கர்வே ளாளர்க் கெலாம்
நன்மைமேன் மேலுமுண் டாகவுங் கம்மாளர்
நட்டுவர்க ளோச்சர் குயவர்
எவரெவரை யுந்நினைத் திருந்தநன் மையினாலே
குறையில்லை வள்ளுவர் களுக்
கெல்லாஞ் சொலும்படி யெமதுசா மான்பலவு
மிங்கிருந் தெமது வீட்டுக்
குவகையொடு முன்னே யனுப்பினோம் பல்லக்கு
நாமும் பினேவருகி றோம்
ஊடேத டுக்கிலற் பாயசுத டாமல்விட்
டோர்க் கெலாந் தீர்க்காயசே. 19

டை சரவணப்பெருமாள் கவிராயர் குமாரர்

அருணாசலக்கவிராயர் பாடியவை.

கவுரிவல்லவ ராஜசிங்கன்மீது பாடியது.

சக்ரவா ளத்தகடு முகடுபட படைனப்ர
சங்கத் தெழுந்த சிம்மம்
தத்வல க்ஷணவித்வ லக்ஷண சுலக்ஷண
விசக்ஷண சபா ரஞ்சிதம்
சத்யலோ கதநுமத லத்தும்வித லத்துமித
லத்தும்ப்ர சித்த துல்யம்
சற்குணா லயமினிமை பெறுசுவைக் கல்வியமு
தத்தலங் கார கும்பம்
உக்ரகா டின்யதிட தடவிகட கடமடை
யுடைத்தெழு தமிழ்க் குஞ்சரம்
உசிதத் துகந்தசித் தாந்தவே தாந்தவுர
ராமவயி ராக்ய சித்தம்
உபயபர் வதவட வரைக்கப் புறத்துமுல
வப்புகழ் நடத்து வீரம்
உரககண பணமகுட புவனசக் ரேசுர
வுதாரநதி குலசிரேஷ்டம்
கைக்கடா சலகோடி தருசேது பதிராஜ
கர்த்தன்வா சற்ப்ர சங்கம்
கற்றறி யிலக்கணச் சோமசுந் தரகுரு
கடாக்ஷகன காபிஷேகம்
கருதுவிரு தவதானி சரவணப் பெருமாள்
கவீசுரன் பெற்ற ரத்நம்
கமலைநா மகள்வளர் நிதானியரு ணாசலக்
கவிசரப மெழுது மோலை
திக்கெலாந் திறைகொண்ட கவுரிவல் லவராஜ
சிங்கமெதிர் கொண்டு காண்க

சீருத நாகமற காவிலாடு தூபமிலொடு
திடமுடை படா வாரணம
தீகருண வலாதகரி பாகப டாக கயந்
செலுதி லா டாத கரிறு
திருகாத தாதிமுனை வளையா நவேழரு
சிற பொடு கொடு தருளவைப, 20

மலையாண்டியப்பைய நரேந்திரன்மீது பாடியது.

தடகதட விடப்புவி புரசரம தடக் ரச
ரிற்பெரிய சேதுபதியா
சலிற்கன மகத்துவ மிருந்திடு சிதத்துவ
சனப்ரபல சற்சன பரன்
தருப்பத மடககடிக விருதுறை விருத்தம
தனபரணி கொச்சக முதல்
தமிழ்க்கடன் மடைபடின றிறக்குமதெனக்கனி
சருககரை பொரப் பகருவோன்
வடக்கொடு குடககொடு கிழககொடு திசைப்புற
மணத்திடு புகழ் பரதாபன
மடற்றொடி கொடிதருபு யிடைகருட முலைச்சியர்
மடற்கிடு தொடைக குவளையான்
வடித்திடு மிலக்கண விலககிப கைககொரு
மலைக்குறு முனிககு நிகாவான்
மனுக்கிளை தழைத்திடு மகிழ்சசியரு ளுசல
மகத்வகவி ராஜ னுலை
கடற்கரை யுடைத்திட விடப்பணி சடைத்தலை
கடுப்பொடு மடிகக விருநாற்
கடக்கய முடற்பட படக்கவி ணடர்த்திடு
கடிப்புயல் குடற் கிழிபடக்
கடைக்கண லடம்சிகை கதித்தெழ வியற்புவி
கடைக்கடை கிடககு மலையும்

கடுப்பொடு பொடிப்பட வடித்தமெவ ளிடைக்கதிர்
கடகத்துற நடக்க மருவார்
கடப்படை திறக்கிட வடிக்கிடு கிடுத்துட
னடுக்கிட வடர்க்கு முனைமா
நடத்துதுரை கனிவொடு மலையாண்டி யப்பைய
நரேந்திர னெதிர்ந்து காண்க
நயப்பரி மதக்கரி சரப்பணி விறற்பணி
நவக்கொலு சரத்ந முருகு
நகைக்கிடு சிவப்புமபி ரப்பொடி பரக்கமு
நமக்கிவை கொடுத்தருளமைவபே. 21

* கும்பனென்னுங் கவிராயர்
மழவரங்கன் என்னும் பிரபுவின்மீது பாடியது.

கொஞ்சுகவி யானையை வசைக்கவி யெயிற்றினுங்
குக்கவியு யிரான் மருட்டும்
குடிலகவி ராஜசிங் கங்களைப் பங்கஞ்செய்
கும்பசர பந்தி னேலை
செஞ்சிவிஜ யாபுரிக் கோட்டைக கபாடம்
திறக்கும் களிற்று வேந்தன்
திறல்கொண்ட லட்சுமண ரங்கமழ வேந்த்ரதுரை
ஜெயசௌர்ய னினிது காண்க
வஞ்சியார்க ளிதயமும் கொஞ்சுபுர வியின்மனமும்
வல்லகவி ராஜர் மனமும்
மகிமைபெறு மூர்த்திகளு மறிவரிது நின்சமுகம்
வருமுனே யறிசதுர நீ
பஞ்சகவி காலப் பயங்கர னெண்டைமான்
பதியிலவ மான மாக்கிப்
பஞ்சலட் சணமெனுங் கசைகொண் டடித்துப்
படிக்கனை முடுக்கினேமே. 22

* இவர் இக்கவியில் படிக்காசுப்புலவரை வசைக்கூறினர்.

படிக்காசுப்புலவர் பாடியவை.

* மழவரங்கன் என்னும் பிரபுவின்மீது பாடியது.

கொல்லத் தமிழ்க்கவி சொலுத்திவாய் வீணபெற்ற
கும்பனென்னு மொரு புந்திமை
கொதுதியுண் டுமிழுண்ட பேரண்ட மென்னவரு
கூர்படிக் காச னேலே
வல்லச் சிவந்தெழும் பல்லவன் றன்கருணை
மாரிபோ லேவழங் கும்
வாழ்வைக் கெடுக்கவரு வென்சடந் தைப்பதிக்
கொள்ளிவாய்ப் பேயக லல்ல
புல்லைத் துரைத்தன ரெனுமனி யிடையிலே
புகுபரிதி நிக ரென்னவே
புகழ்கொண்ட லட்சுமண ரங்கமழ வேந்த்ரதுரை
பூபனெதிர் கொண்டு ராண்க
... .
....
என்பேரி லபசார முண்டெனத் துதிசெய்ய
எனைவர வழைத் திடுவையே. 23

வாந்தைக்குடி மகாஜனத்தலைவர்மீது பாடியது.

தூளிபட வேவந்த கவிவாணர் கவியெலாஞ்
சூறையிடு கவிரா சுத்சன்
துஷ்டநிஷ் டூரகவி சுப்ரதீ பக்கவி
துறைக்கெலாந் துள்ளு சேட்டு
வாளேருதி பாய்கின்ற வாந்தைக்குடி மேவிய
மகாஜனத் தலைவ ருக்கு
மட்டுலவு சோலைக ளாந்தைப் படிக்காசு
வரவிட்ட விஞ்ஞா பனம்

* படிக்காசுப்புலவர் தன்னை வசைக்கூறிய கும்பனென்னுங் கவிராயனை தான் வசைக்கூறிப் பாடியது

காளமே கம்போல வசைபாட யாருமிக்
காசினியி லவதரித் தோம்
காளாகசர் தோழனமேற் கவிதையும் மேலுமுள
கவிதையு மறந்த தில்லையா
ஆளனு மிருக்கவே செய்தகரு மங்களுக்
கழிவுந்த டுதலாகு மோ
ஆகாத காரியம் போகாது விண்ணிலே
யயகீர்த்தி நிலை நிற்குமே. 24

இரகுநாத சேதுபதிமீது பாடியது.

விருதுகவி ராஜன் கவிராசக்ர வர்த்திவாய்
வீண்பேசு வார்கள் மிண்டன்
விஞ்ஞையர்கள் தம்பிரான் களங்கைப் படிக்காசு
விவரமுட னெழுது மோலை
பொருதுபிர பந்த மதி லதிகவிரல் சேகரன்
புகழ்செய்தவ வாய்க மாரன்
பூச்சக்ர மன்னாபணி ரகுநாத சேதுபதி
பூரித் தெழுந்து காண்க
பரிதிமதி யுள்ளளவு நிற்கும்ப்ர பந்தகவி
பாடிநின் கீர்த்தி கேட்டுப்
பஞ்சலட் சணதமிழ்க் காணிகளை யுங்கொண்டு
பரிவாக வுனை நாடியே
இருபதின் காதவழி கடலேறி வந்தன
னிருந்தமிழ்க கொள்ள வேண்டி
இந்நேர மேநம்மை யிருகாத வழியளவு
மெதிர்காண வரல் வேண்டுமே, 25

சீகாழி-அருணாசலக் கவிராயர் பாடியவை.

தென்குளத்தூர் முத்துத்தானப்பர்மீது பாடியது.

எத்திசையு மேபரவு அருணா சலமுனி
யெதிர்த்தபா வலர் குடாரி
இராமா யணக்கவிதை நாடகஞ் செய்தவ
னிலக்கண முணர்ந்த புலவன்

முத்தமிழ்க் காழியரு ணாசலக் கவிராயன்
முகில்வர விடுசகு மோர்ந்து
முந்துபுகழ் டென் னளத் தூரமுத்து தானப்பன்
முகமலர்ந் தினிது காண்க
விந்துவ சனங்களுந் காதர மாகியவர்
வேண்டிய மேலான மக்கணம்
விரகுடனெளித் நினை யெனக் கேட்டு நாமுமினி
மேவியேநு கவியெழுதி னமை
உத்தம சிகாமணி நீயாத லாலிவிட
மூறுபெரு மையுமே டாடருமுன்
ஓராயி ரங்கரும பதுமே வெணடு நீயென
தாகநதுவர விடல் வேண்டுமே. 26

தேப்பெருமாள் வணிகாதிபன்மீது பாடியது.

கணிகொண்ட பஞ்சலக் ஷணமிரா மாயணக்
கடலையு முணர்ந்து புலவன
கவிராஜர் புகழ்கின்ற காழியரு ணாசலக்
கவிராய னெழுது மோலை
மணிகொண்ட மாபன்னிங் க பமகி பாலனுண்
மகிழ்ந்தகுதன் வணிகா திபன்
வருசீர் படைத்ததேப் பெருமா ணரேந்திரன்
மனமுவந் தினிது காண்க
அணிகொண்ட த்யாகேசர் வண்ணமுறை செய்தது
மதற்கு வெகுமதி செய்ததும்
அதினமக் குபகார நீசெய்த தும்புவியி
லறியாத பேரு முளரோ
பணிகொண்ட ராமகீர்த் தனையுமப் படியே
பரிந்துநீ கேட்க வேண்டும்
பாரிலோ ராயிரம் பிறைகண்டு நீமகிழ்
படைத்துவாழ்ந் திருக வினிமேல். 27

மணலி முத்துக்கிருஷ்ணன்மீது பாடியது.

சித்தி நல்கு வல்லி புத்தி தரு கிருபை வல்லி
பன் வணங்கும் வல்லி
தில்லைநாயக வல்லி சிவகாம வல்லி திரு
திருவிழிக் கருணை பாலே
சத்தியசகமென்று பூமண்டலாதிபர்கள்
நாமமெனக் கணும் துதிக்கும்
சகலபாஷாதிபுனை மணலிமுத் துக்கிருஷ்ண
சகாய நீ வாழி கண்டாய்
நறுந்துமலர் நுவலான் மதியம்நீ செஞ்சாலி
நான் கருவி மழை மேகம்நீ
நளினம்நான் பருதிநீ பிள்ளைநான் அன்னைநீ
நான் கவிஞன் வழுதி நீகாண்
சுந்தரமுள ராமாயணந் தன்னைக் கொண்டுனது
சுகமுமது பெற வருகிறேன்
சொற்பொருளறிந்தளவு சொல்லுவேன் கேட்கவே
துணையாக வேணும் நீயே. 28

சொக்கநாதப் புலவர்
மகிபாலன் மங்கைநகராதிபன்மீது பாடியது.

எண்படாதெதிரிட்ட பாவலர்க் கிடியேறு
நாவலோர் கனக மேரு
இந்திரன் பணிசுந்தரேசரருள் சேர்சொக்க
நாதனின் றெழுது மோலை
திண்படா மதியொத்த முகபடாந் தொடுகின்ற
திரிகடா சலேசன் முத்துத்
திருவுடைய மகிபாலன் மங்கைநக ராதிபன்
சிந்தையொ டெழுந்து காண்க
கண்படா வத்திரங் கொம்புகொள் ளாதகலை
கழிபடாக் கோடி நஞ்சு

காணாத நாகமுட் டையாத வுடைபண்டு
கட்டுப் படாக்க லிங்கம்
பண்படாக் கோசிக நெய்ப்படா வாடையறை
கொட்டாத தானை முதுத
பட்டிடாத் தாசொன்ற மட்டிலா விலையிற்
பரிந்துவர விடல் வேண்டுமே. 29

காளமேகப் புலவர் பாடியது.

தூதஞ்சு நாழிகையி லாறுநா ழிகைதனிற்
சொற்சந்த மாலை சொல்லத்
துகளிலா வந்தாதி யேழுநா ழிகைதனிற்
றொகைபட விரித்துரைக்கப்
பாதஞ்செய் மடல்கோவை பத்துநா ழிகைதனிற்
பரணியொரு நாண் முழுதுமே
பாரசா விபமெலா மோரிரு தினத்திலே
பகரக் கொடிக் கட்டினேன்
சீதஞ் செயுந்திங்கண் மரபினா னீடுபுகழ்
செய்யதிரு மலைராயன் முன்
சீறுமா றென்றுமிக தாறுமா றுகள்சொற்
றிருட்டுக் கவிப் புலவரைக்
காதங் கறுத்துச் சவுக்கிட் டடித்துக்
கதுப்பிற் புடைத்து வெற்றிக்
கல்லணையி னொடுகொடிய கடிவாள மிட்டேறு
கவிகாள மேக நானே. 30

அந்தகக்கவி வீரராகவமுதலியார் சேலஞ் செழியன்மீது பாடியது.

ஏடா யிரங்கோடி யெழுதாம றன்மனத்
தெழுதிப் படித்த விரகன்
இமசேது பரியந்த மெதிரிலா கவிவீர
ராகவன் விடுக்கு மோலை

சேடாதி பன்னிரா மசைத்திடும் புகழ்பெற்ற
திரிபதகை குலசேகரன்
தெனபாலே சலம புரந்துநா கந்நீர்த்த
சேழியனெதிர் ராணாடு காண்க
பாடா ரா தநவ மெரிபாத கநதுரம
பறறிச ராலாத கோமைம
பறைாந கொபாணம் பணைந்த கோடைவெம்
பமைடப்ற பெடாத தந்தம
சூடாச பாடலம பூவாத மாவொடு
மொடுதது முடியாந சடிலம்
சொனனசொப சொல்லாத கிளிளையோன் றெங்குரு,
துதிகவோ விடல் வெண்டுமே. 31

மயிலை-அருணாசலக் கவிராயர்
வேங்கடாசல வள்ளல்மீது பாடியது.

சிற்பரிகிரபுரி தாரா தரிபம்பிகை
சாமபரிப மாணிகு வா
சுத்பா லாயபசா பரிபூரணி
திருதுளா ஈன்னி லனுகா ச
செசா மால் ரணைப பா லாவ மாபவந்த
செல்விசிவ காம வலமி
திருவடி சடைதி மயிலையருணாசலன்
செங்கைபா லெழுது மாலை
மற்பயா சைலமொயில் விற்பன விவேகனமட
மாகாமட ஆறுமாான
வளர்கங்கை குலதிலான மதியூகி நிறைசெல்வ
வொமைசெறி பாணரினை *
மருமலா குவளையணி மாாபினை நீணாடாவி
வொபோக கொரு சாபினன்

மங்களா கரவிஜய வேங்கடா சலசுமுக
　　வள்ளலெதிர் சொண்டு பாண்க
சற்பனைக் காரர்துர்ப் போதனையி லென்றம்பி
　　சாலவு மயங்கி நெஞ்சம்
சஞ்சலப் பட்டுளந் தடுமாறி வேறுமொரு
　　சார்புமில் லாம லேங்கித்
தளர்வெய்தி வந்தவனை யஞ்சலஞ் சேலெனத்
　　தயவுவைத் தன்று முதலாச்
சகலமுந் தந்தினிது செய்கின்ற செய்திகள்
　　சமஸ்தமுங் கேட்டிருந் தோம்
சொப்பனத் திலுமுனை மறப்பதிலை யவனையொரு
　　தொழிலில்லைத் தாளாக்கி முன்
தொந்தரையை நீக்கிமிக வும்பணித ளுக்கியுன்
　　சொல்வழி நடப்ப தாக்கிச்
சோலியொன் றில்லாது கூழுமொன் டாகிலுஞ்
　　சுகமே யிருக்க வைத்துத்
தொல்லுலகின் மாளாத செல்வமுந் தந்தெனது
　　துதியுநீ பெறல் வேண்டுமே. 30

சுப்பிரமணியக் கவிராயர்
வீரபூபாலன் தனையன் வேங்கடரங்கன்மீது பாடியது.

மஞ்சரி கலம்பகங் கோவைநா தனராக
　　மாலைபத சந்த மாலை
மடலுலா பரணிபிள் ளைக்கவிதை முதலா
　　வழுத்தும்ப்ர பந்த வாக்கி
மகுடமுடி மன்னர்சிர கரகம்பி தஞ்செயும்
　　வசனவுசி தப்ர சங்கன்
வாதுபுரி விகடகவி மதகரிகு ழாங்கடமை
　　வாய்வீ ரடக்கு சிங்கம்

சதுரசரித முத்தமிழை பெங்குந் செலுத்திவரு
தாஷ்டீக மான நிபுணன்
தண்டமி ழிலக்கண விலக்கியமதாம் பெரிய
சலதிநிலை கண்ட வங்கம்
தணிகாசலக் குமரர் பாமறவா தவன்
சரசுவதி நடன சாலை
சரசகவி சோடசாவதானிசுப் பிரமணியன்
தான்மகிழ்ந் தனுப்பு மோலை
கஞ்சமலா மாலைமுந் நூலிலத் திண்புயன்
கருவேடு நகராதிபன்
கவிஞர்கற் பகமுத்த ராபதிப னெம்பிரக்
கியாதிபழ மறை வேதியன்
காரைநிக ரானகொடை வீரபூ பாலனருள்
காதல்சுத னென சுமுகன்
கங்கைநதி யாளன்வேங் கடரங்க மாலிது
கருத்தினின் மகிழ்ந்து காண்க
விஞ்சுபுவி மீதிலுன் போலரசு சிதநன
விவேகிவே றில்லையென்றே
விரும்பிவெகு நாளாக வினைபடுத் தனனெனது
வெறுமைநீங் கிடவு மினியோர்
வேளைதனி லென்றனைவ ரனமது தன்னையென்
மீதிலன் பாக மகிழ்வாய்
வினவியிப் புவியிலுன் பேரிலக வின்னுமிக
மேன்மைசெய் திடல் வேண்டுமே.

சீட்டுக்கவித் திரட்டு

முற்றிற்று.
